# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 210/மா/2024

**நாள்: 04.02.2026**

| | | |
|---|---|---|
| கோ. கோவிந்தராஜ்,<br>சென்னை–83.. | --- | முறையீட்டு மனுதாரர் |
| மண்டல அலுவலர்,<br>மண்டலம்–10,<br>பெருநகர சென்னை மாநகராட்சி. | --- | எதிர்மனுதாரர் |

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவரின் 14.10.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.10.2024 அன்று பெறப்பட்டு 210/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவர் தனது 14.10.2024 நாளிட்ட மனுவில் இணைத்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு முகவரியிட்ட 04.10.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"கதவு எண்.83/75, 4வது அவின்யூ, அசோக் நகர், சென்னை–83 என்ற முகவரியில் சில ஆண்டுகளுக்கு முன் அடுக்குமாடி குடியிருப்பைபோல் கட்டிடம் கட்டப்பட்டு கட்டிடம் முன்பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான மழைநீர் கால்வாய் மற்றும் சாலையை ஆக்கிரமித்து Steps & Ramp அமைக்கப்பட்டுள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படத்தில் காணலாம். இந்த ஆக்கிரமிப்பால் மழை காலங்களில் அங்கு தண்ணீர் சீராக செல்ல முடியாமல் தடைபடுகிறது. மேலும் மின்சார ஒயர்கள் அங்கு பழுதடைந்தாலும் சீர் செய்ய இயலவில்லை. பாதசாரிகள் நடைப்பாதை மற்றும் சாலையோரம் நடந்து செல்ல இயலாததால் அருகில் உள்ள பள்ளிகளில் பயிலும் சிறுவர்கள் மற்றும் பொதுமக்கள் நடுசாலையில் நடந்து சென்று விபத்துகள்

நேரிடுகிறது. ஆகவே, இம்மனுவை கண்ட 7 நாட்களில் புடைப்பட வீடியோ ஆதாரங்களுடன் ஆக்கிரமிப்புகளை அகற்றிய பதில் அளிக்க உத்தரவிட இம்மனு அளிக்கப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளாக வார்டு–135 அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆக்கிரமிப்பு சம்பந்தமாக சென்னை மாநகராட்சி உயர் அதிகாரிகள் முதல் யுவராஜ் AE வரை பல புகார்கள் அளிக்கப்பட்டுள்ளது. நடவடிக்கை எடுத்து பதில் அளிப்பதில்லை. இப்புகார் மீது நடவடிக்கை எடுத்து பதில் அளிக்காதப்பட்சத்தில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களுக்கு புகார் அளிக்கப்படும். நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர நேரிடும் என்பதை ஆக்கிரமிப்பால் பாதிக்கப்படும் மனுதாரர் தெரிவித்து இம்மனு அளிக்கப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 18.11.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் எவ்வித அறிக்கையும் கிடைக்கப் பெறவில்லை.

3. இருப்பினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 09.12.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 30.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர் 09.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"சென்னை–83, அசோக் நகர், 4வது அவின்யூ, கதவு எண்.83/75, என்ற முகவரியில் சில ஆண்டுகளுக்கு முன் அடுக்குமாடி குடியிருப்பு கட்டப்பட்டு அக்கட்டிடத்தின் முன்பகுதியில் மழைநீர் கால்வாய் மற்றும் சாலையை ஆக்கிரமித்து Steps & Ramp அமைக்கப்பட்டுள்ளது. இதனால் மழை காலத்தில் தண்ணீர் சீராக செல்ல முடியாமலும், மின்சார ஒயர்கள் பழுதடைந்தாலும் அதனை சீரமைக்க இயலவில்லை. மேலும் பள்ளி செல்லும் சிறுவர் முதல் பெரியவர் அனைவரும் நடுசாலையில் நடந்து செல்வதால் விபத்துகள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.

2023 முதல் மனு கொடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது குறித்து காவல் துறை பாதுகாப்புடன் மேற்கண்ட ஆக்கிரப்பினை அகற்ற கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால், இம்முறை மன்றத்தால் விசாரணைக்கு உத்தரவு இட்டபின் காவல் துறை பாதுகாப்பு இல்லாததால் 06.12.2025 அன்று ஆக்கிரமிப்பு முழுமையாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலர்களால் அகற்ற இயலவில்லை. எனவே, மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை காவல் துறை பாதுகாப்புடன் முழுமையாக அகற்றிட உரிய உத்தரவினை பிறப்பிக்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

5. எதிர்மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலர் சார்பாக இளநிலை பொறியாளர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 09.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்து உள்ளார்:–

“மனுதாரர் புகாரில் அசோக் நகர் 4வது அவின்யூ கதவு எண்.83/75ல் அமைந்துள்ள கட்டிடம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நடைபாதை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டிருந்த Steps முழுமையாக அகற்றப்பட்டது. ஆனால் கான்கிரீட் கலவை அதிகமாக பயன்படுத்தி சாய்வு தளம் அமைக்கப்பட்டிருந்ததால் முழுமையாக அகற்ற இயலவில்லை. இதற்கான புகைப்பட நகலினை சமர்ப்பிக்கிறேன். மேலும், சிலர் எதிர்ப்பு தெரிவித்த காரணத்தினால் மேற்கண்ட சாய்வு தளத்தினை காவல்துறை உதவியுடன் அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்”.

6. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

“சென்னை–83, அசோக் நகர், 4வது அவின்யூ, கதவு எண்.83/75, என்ற முகவரியில் சில ஆண்டுகளுக்கு முன் அடுக்குமாடி குடியிருப்பு கட்டப்பட்டு அக்கட்டிடத்தின் முன்பகுதியில் மழைநீர் கால்வாய் மற்றும் சாலையை ஆக்கிரமித்து Steps & Ramp அமைக்கப்பட்டதால், மழைக் காலத்தில் தண்ணீர் சீராக செல்ல முடியாமலும், மின்சார ஒயர்கள் பழுதடைந்தாலும் அதனை சீரமைக்க இயலவில்லை என்பதும், மேற்கண்ட ஆக்கிரமிப்பால் பள்ளி செல்லும் சிறுவர் முதல் பெரியவர் அனைவரும் நடுசாலையில் நடந்து செல்வதால் விபத்துகள் ஏற்பட அதிக வாய்ப்புள்ள நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி 06.12.2025 அன்று ஆக்கிரமிப்பினை அகற்ற முயற்சி செய்தும் காவல் துறை பாதுகாப்பு இல்லாததால் முழுமையாக அகற்றப்படவில்லை. எனவே, காவல் துறை பாதுகாப்புடன் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–10–ன் மூலம் முழுமையாக அகற்றிட உரிய உத்தரவினை பிறப்பிக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள அசோக் நகர் 4வது அவின்யூ கதவு எண்.83/75ல் அமைந்துள்ள கட்டிடம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, நடைபாதை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டிருந்த Steps முழுமையாக அகற்றப்பட்டது என்பதும், ஆனால் கான்கிரீட் கலவை அதிகமாக பயன்படுத்தி சாய்வு தளம் அமைக்கப்பட்டிருந்ததால் முழுமையாக அகற்ற இயலவில்லை என்பதும், சிலர் எதிர்ப்பு தெரிவித்த காரணத்தினால் மேற்கண்ட சாய்வு தளத்தினை முழுமையாக அகற்றவில்லை. எனவே, காவல்துறை உதவியுடன் அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் இளநிலை பொறியாளர் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள அசோக் நகர் 4வது அவின்யூ கதவு எண்.83/75ல் அமைந்துள்ள கட்டிடத்தின் முன்புறம் உள்ள நடைபாதையை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டிருந்த Steps முழுமையாக அகற்றப்பட்டாலும், கான்கிரீட் கலவை அதிகமாக பயன்படுத்தி அமைக்கப்பட்டிருந்த சாய்வு தளத்தினை முழுமையாக அகற்ற இயலாததாலும், மற்றும் சிலர் எதிர்ப்பு தெரிவித்த காரணத்தினாலும், அச்சாய்வு தளத்தினை அகற்ற காவல் துறை உதவியுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி இளநிலை பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதால் அவ்வாக்கிரமிப்பினை உரிய விதிமுறைகளை கடைபிடித்து காவல் துறை உதவியுடன் முழுமையாக விரைவில்

அகற்றுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 04–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. கோ. கோவிந்தராஜ்,
எண் 22/43, 15வது தெரு,
அசோக் நகர்,
சென்னை–600 083.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 64 N.S.K. சாலை,
கோடம்பாக்கம், சென்னை–600 024.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

5/2/26
செயலாளர்

5/2/26
1/10